# லவ்டேல் லாரன்ஸ் பள்ளியின் 167வது நிறுவனர் தின விழா: அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பங்கேற்கிறார்



ஊட்டி, ஏப்.30-

லவ்டேல் லாரன்ஸ் பள்ளியின் 167வது நிறுவனர் தின விழாவில் தமிழக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன் பங்கேற்று பரிசுகளை வழங்குகிறார்.

நீலகிரி மாவட்டம் ஊட்டியருகேயுள்ள லவ்டேல் பகுதியில் மத்திய அரசின் கீழ் செயல்பட்டு வரும் புகழ்பெற்ற கல்வி நிறுவனமான லாரன்ஸ் பள்ளியில் 167-ஆவது நிறுவனர் தின விழா இன்று (ஏப்ரல் 30) தொடங்கி, மே 1 மற்றும் மே 2தேதிகளில்மிகவும்சிறப்பாக கொண்டாடவுள்ளது.

இவ்விழாவின் முக்கிய நிகழ்வுகளில், சிறப்பு விருந்தினராக பள்ளியின் முன்னாள் மாணவரும், தற்போதைய தமிழ்நாடு அரசின் தகவல்தொழில்நுட்பத்துறை அமைச்சருமான டாக்டர் பழனிவேல் தியாகராஜன் (முன்னாள்மாணவர்1983) மே 2ஆம் தேதி காலை நடைபெறும் பள்ளிமாணவரின்சீருடைஅணிவகுப்பிற்குதலைமைவகித்தும், ;அதனைத்தொடர்ந்துநடைபெறும் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குகிறார்.

அத்துடன், மே 2ஆம் தேதி மாலைஇறுதிநிகழ்வாக 'இராணுவமுறைப்படி இசைக்கருவிகள்வாசிக்கும்' நிகழ்ச்சிக்கு, இந்திய ராணுவத்தில் உயர்பதவி வகிக்கும் மற்றொரு முன்னாள்மாணவர்லெப்டினன்ட் ஜெனரல் திராஜ் சேத் (முன்னாள் மாணவர்-1983) முக்கிய விருந்தினராக கலந்துகொள்கிறார். வுp ழாவினையொட்டி இன்று காலை 8.00 முதல் பிற்பகல் 1.30 வரை – பெற்றோர் ஆசிரியர் சந்திப்பும், காலை 9.30 – ஜூனியர் பள்ளியில் புத்தக கண்காட்சியும் நடக்கிறது. மாலை 3.15 – 'கலைடோஸ்கோப்' – கலாசார நிகழ்ச்சியும், மாலை 6.50 – 'சன் செட் சென்சேஷன்' நிகழ்ச்சியும் நடக்கிறது.

தொடர்ந்து நாளை (மே 1-ந்தேதி) காலை 9.30க்கு – 'ஸ்பெக்டக்கிள் 2025' கண்காட்சியின் துவக்க விழாவும், முற்பகல் 11.00 மணிக்கு – பழைய மாணவர்களுக்கும், தற்போதைய மாணவர்களுக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெறும். காலை 11.00 – 'கல்லோப்பிங் ஜாய்' எனும் மாணவ, மாணவியர்களின் குதிரைப்பந்தயக் காட்சியும் நடக்கிறது. மாலை 4.30 – பள்ளி நாடகம் நடைபெறுகிறது. மே 2-ந்தேதி காலை 8.30 மணிக்கு ட்ரூப்பிங் த கலர் நிகழ்ச்சியும் 10.15 மணிக்கு பரிசளிப்பு விழாவும் நடக்கிறது. இதில் தமிழக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி பேசுகிறார். மாலை – பீட்டிங் ரிட்ரீட் நிகழ்ச்சி நடக்கிறது. இவ்விழாவில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டு பள்ளியின் பெருமைகளை கொண்டாட உள்ளனர்.

# மாநில அளவிலான பூப்பந்தாட்டப் போட்டி



ஈரோடு,ஏப்.30-

மாநில அளவிலான பூப்பந்தாட்டப் போட்டி திருச்செங்கோடு கேஎஸ்ஆர் கல்லூரியில் நடைபெற்றது. 15 மாவட்டங்களிலிருந்து, 14 மற்றும் 17 வயதிற்குட்பட்டவர் பிரிவில் மாணவ மாணவியர் கலந்து கொண்டு விளையாடினர். வேளாளர் பள்ளி விளையாட்டு வீராங்கனைகள் கலந்து கொண்டு உற்சாகமாகவும் சிறப்பாகவும் விளையாடி, மாநில அளவில் முதலிடம் பிடித்து வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றினர். வெற்றி பெற்ற மாணவிகளைப் பள்ளியின் தாளாளர் செ.து. சந்திரசேகர், முதல்வர் செல்வி வெ. லதா, பள்ளியின் மேலாளர்கள் ல. சென்னியப்பன் மற்றும் ர. அருள்குமார் பழனிச்சாமி ஆசிரியைகள் பாராட்டிக் கௌரவித்தனர்.

# ஈரோட்டில் மக்களை தேடி மாநகராட்சி மனுக்கள் பெறும் முகாம்



ஈரோடு ஏப் 30-

பொது மக்களுக்கு மாநகராட்சியால் வழங்கப்படும் சேவைகளை எளிமைப்படுத்தி வழங்கும் பொருட்டு தாங்கள் வசிக்கும் பகுதிக்கே மாநகராட்சி அலுவலர்கள் நேரடியாக வருகைதந்து சொத்துவரி, காலியிடவரி, சொத்துவரி பெயர்மாற்றம், புதிய குடிநீர் இணைப்பு, புதிய பாதாள சாக்கடை இணைப்பு, சொத்துவரி மற்றும் காலியிடவரி பெயர் திருத்தம் ஆகிய சேவைகள் பொதுமக்களுக்கு உடனுக்குடன் ஏற்படுத்தி தர உத்தேசிக்கப்பட்டு.

மண்டலம்-III. வார்டு எண்.10ல், லட்சுமி துரைசாமி திருமண மண்டபம், வில்லரசம்பட்டி பகுதியில் நேற்று காலை முதல் மாலை வரை நடைபெற்றது. .கூட்டத்திற்கு ஈரோடு மாநகராட்சி ஆணையர்(பொ) தனலட்சுமி தலைமை தாங்கினார் இதில் ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சிறப்பாக அழைப்பாளராக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி மனுக்களை வாங்கி முகாமை துவங்கி வைத்தார்

இதில் துணை மேயர் வீ செல்வராஜ் மூன்றாம் மண்டல தலைவர் சசிகுமார் மாநகராட்சி பொறியாளர் முருகேசன் கவுன்சிலர்கள் மணிகண்ட ராஜா குமாரவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# நீலகிரி மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு தற்காலிக பணியாளர்கள் நியமனம்: விண்ணப்பிக்க வரும் 5-ந் தேதி கடைசி நாள்

ஊட்டி, ஏப்.30-

நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கீழ்க்கண்ட பணியிடங்கள் ஒப்பந்த ஊதியத்தில் தற்காலிகமாக நிரப்பப்படவுள்ளது. ஐடி கோடிநேட்டர் (01பணியிடம்)- தகுதி: எம்சிஏ பிசிஏ, எக்கோ டெக்னீசியன், (01 பணியிடம்)- தகுதி: பி.எஸ்.சி டிப்ளமோ இன் கார்டியாக டெக்னாலஜி டிப்ளமோ இன் மெடிக்கல் இமேஜிங் டெக்னாலஜி டேடா என்ட்ரி ஆபரேட்டர் (04 பணியிடங்கள்) தகுதி: ஏதேனும் ஒருபட்டப்படிப்பு டிப்ளோமா (கணினி செயலிகள் அறிவு பெற்றிருக்க வேண்டும் வயதுவரம்பு - குறைந்தபட்சம் 21 வயது அதிகபட்சம் 45 வயது முன் அனுபவம்- குறைந்தபட்சம் 2 வருடங்கள் குறிப்பிட்ட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விண்ணபங்கள் (முழுமையான முகவரியுடன் ) மற்றும் சான்றிதழ் நகல்கள் (கல்வித் தகுதி சாதிச்சான்றுஆதார்) தபால் மூலமாக இவ்வலுவலகத்தில் பெற இறுதி நாள்- 05.05.2025 மாலை 5 மணிக்குள் விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ் நகல்கள் தபால் மூலமாக முதல்வர், நிர்வாக அலுவலகம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, இந்துநகர், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்-643005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். இத்தகவலை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# மே தினத்தையொட்டி நாளை மதுக்கடைகளுக்கு விடுமுறை: நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவிப்பு

ஊட்டி, ஏப்.30-

மே தினத்தையொட்டி நாளை மதுக்கடைகளுக்கு விடுமுறை விடப்படுவதாக நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

நீலகிரி மாவட்டத்தில் செயல்படும் எப்.எல்.1 மதுபான சில்லறை விற்பனை கடைகள், எப்.எல்.2 கிளப் பார்கள், எப்.எல்.3 ஓட்டல் பார்கள் மற்றும் எப்.எல்.3ஏ ஆகியவற்றில் மே தினத்தை முன்னிட்டு நாளை (01.05.2025) தேதியில் எவ்வித மதுபானங்களும் விற்பனை செய்யப்பட மாட்டாது எனவும், மேற்படி நாளில் கட்டாயமாக டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் எனவும் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தினத்தில் கட்டாயமாக டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது.

உத்தரவை மீறி எவரேனும் மதுபானங்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட மது விற்பனை உரிமைதாரர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் மீது தமிழ்நாடு மதுவிலக்குச்சட்டம்- 1937 மற்றும் சம்மந்தப்பட்ட இதர விதிகளின்கீழ் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி தினங்களில் நீலகிரி மாவட்டத்தில், டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள் மற்றும் ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் ஏதேனும் திறந்திருப்பதாக பொதுமக்களுக்கு தகவல் தெரியும்பட்சத்தில் அந்த விவரத்தை கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு மற்றும் அமலாக்கம், உதகை (0423-2223802), உதவி ஆணையர்(ஆயம்) உதகமண்டலம், (0423-2443693), மாவட்ட மேலாளர் (டாஸ்மாக்), எடப்பள்ளி, குன்னூர் (0423-2234211) ஆகிய தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட தகவலை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# நீலகிரி ஊர்க்காவல் படை பிரிவிற்கு ஆட்கள் சேர்ப்பு: தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்

ஊட்டி, ஏப்.30-

ஊர்க்காவல் படை பிரிவிற்கு ஆட்கள் சேர்க்கப்பட உள்ளதால் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது குறித்து நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

நீலகிரி மாவட்ட ஊர்காவல்படை பிரிவில் காலியாக உள்ள 126 ஊர்க்காவல் படையினருக்கான தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி ஃ தோல்வி, வயது வரம்பு 18 முதல் 50 வயதுக்குள் நல்ல உடல் தகுதி இருத்தல் வேண்டும். ஊர்க்காவல் படையில் சேர்ந்து தொண்டு செய்ய விருப்பம் மற்றும் சேவை மனப்பான்மை உடைய ஆண்பெண் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது விண்ணப்பத்தினை சுயவிவர குறிப்புடன் வட்டார தளபதி, ஊர்காவல் படை, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் என்ற முகவலரிக்கு 15.05.2025-ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும் என நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா தெரிவித்துள்ளார்.

# திண்டல் வேளாளர் வித்யாலயா சீனியர் செகண்டரி பள்ளியில் உத்பவ் கலை விழா




ஈரோடு ஏப் -30

ஈரோடு மாவட்டம் திண்டல் வேளாளர் வித்யாலயா சீனியர் செகண்டரி பள்ளியில் "உத்பவ் 2025" கலை விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாளர் கல்வி அறக்கட்டளையின் தலைவர் சி.ஜெயக்குமார் கலந்து கொண்டு தலைமையுரை வழங்கினார். பள்ளியின் தாளாளர் எஸ்.டி. சந்திரசேகர் வரவேற்புரையாற்றினார். இதில் பொருளாளர். பி. கே.பி.அருண் வாழ்த்துரை வழங்க, வேளாளர் கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர். சி.பாலசுப்ரமணியம், எம்.யுவராஜா, மற்றும் வேளாளர் கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக முன்னாள் காவல் துறை இயக்குநர். சி.ஷைலேந்திர பாபு. ஐ. பி. எஸ். கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் பள்ளியின் முதன்மை முதல்வர் ஆர்.நல்லப்பன் வாழ்த்துரை வழங்கினார். மேலும், இவ்விழாவில் பள்ளியின் முதல்வர் வி.பிரியதர்ஷினி ஆண்டறிக்கை வாசித்தார். தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இக்கலைநிகழ்ச்சியின் இறுதியாகத் துணை முதல்வர் ஆர்.மஞ்சுளா நன்றிகூறினார். இதில் மக்கள் தொடர்பு அலுவலர் எம்.கார்த்திகேயன், ஆசிரிய ஆசிரியைகள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்

## ஊட்டியில்

# பாரதிதாசன் பிறந்த நாள் விழா



ஊட்டி, ஏப்.30-

பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பாக புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா தமிழர் எழுச்சி தினமாக கொண்டாடப்பட்டது.

ஊட்டியிலுள்ள மாவட்ட மைய நூலகத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்திற்கு பிறகு பாவேந்தர் நூல்கள் கண்காட்சியை ஒய்வுபெற்ற வனச்சரகர் வித்யாதரன் திறந்து வைத்தார். தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற தலைப்பில் கருத்தரங்கை கவிஞர் நீலமலை ஜேபி துவக்கி வைத்தார். நிகழ்வை ஜனார்தனன் தலைமை வகிக்க மாவட்ட நூலகர் பீ. ரவி முன்னிலை வகித்தார். கருத்தரங்கில் இரண்டாம் நிலை நூலகர் சிவாஜி, சக்தி சுரேஸ், ஆடிட்டர் பாபு ஆகியோர் உரையாற்றினர். பொன் அருண சிவன்யா மற்றும் மாணவிகள் கவிதைகளை வாசித்தனர். கண்ணாகன் நன்றி நவில விழா நிறைவு பெற்றது.

# நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆராய்ச்சி கருத்தரங்கம்



ஈரோடு ஏப் 30-

ஈரோடு நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் ஆராய்ச்சி முன்னேற்றம் மற்றும் மத்திய நூலகத்தின் சார்பில் தரத்திலான ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிடுதல் குறித்த "அறிவார்ந்த தொடர்பியல்" என்கிற தலைப்பில் ஆசிரியர்கள் மேம்பாட்டிற்கான கருத்தரங்கம் நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி.சண்முகன் தலைமையில் நடைப்பெற்ற இக்கருத்தரங்கில் கோயமுத்தூர் தொழில்நுட்ப நிறுவனத்தின் நூலகத்துறையின் புலமுதல்வர் முனைவர் எம். மந்திராசலம் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டார். பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் திரு ச. நந்தகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

பொறியியல் கல்லூரியின் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்தறையின் புலமுதல்வர் முனைவர் சி.என் மாரிமுத்து வரவேற்றார்மேலும், தொழில்நுட்பக் கல்லூரியின் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத் துறை ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி. ஆனந்த் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். இதனை தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் முனைவர் எம். மந்திராசலம் அவர்கள் "அறிவார்ந்த தொடர்பியல்" பற்றி காணொலி காட்சி மூலம் விளக்கம் அளிக்கையில், ஸ்கோப் ஆப் இன்டெக்ஸ் மற்றும் வெப் ஆப் சைன்ஸின் மூலமாக ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியீடு செய்ய தேவையான நுணுக்கங்களையும், வழிகாட்டுதல்களையும் 200க்கும் மேற்பட்ட நந்தா கல்வி நிறுவனங்களின் பேராசிரியர்களுடன் பகிர்ந்துக் கொண்டார். நிகழ்வின் முடிவில் தொழில்நுட்ப கல்லூரி மத்திய நூலகத்தின் நூலகர் முனைவர் டி. பிரகாஷ் நன்றி கூறினார். இக்கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ். திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ்.ஆறுமுகம் மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் திரு. ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்தி பாராட்டினார்கள்.




**வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்களை காத்திட ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு உள்ள சிக்னலில் பச்சைப் பந்தலை கிராடாய் அமைப்பின் சார்பில் போடப்பட்டுள்ளது**

# காலிங்கராயன் பாளையம் அனைத்து வணிகர்கள் சங்க மூன்றாம் ஆண்டு குடும்ப விழா



ஈரோடு ஏப் 30-

காலிங்கராயன் பாளையம் அனைத்து வணிகர்கள் சங்கம் மூன்றாம் ஆண்டு குடும்ப விழா காலிங்கராயன் பாளையம் சரஸ்வதி மஹாலில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் ஈரோடு மாவட்ட துணைத் தலைவர் .வேலா பி எஸ்சுந்தர்ராஜன் தலைமையில் சங்கத் தலைவர் சி..ஞானசேகர் வரவேற்புரையுடன் நடைபெற்றது. சங்க ஆண்டறிக்கையை செயலாளர் எம்.சரவணக்குமாரும் வரவு செலவு கணக்கை பொருளாளர் எம்..குழந்தைராஜனும் சமர்ப்பித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு ஈரோடு மாவட்ட தலைவர் .இரா.க.சண்முவேல், மாநில துணைத் தலைவர் .ப.திருமூர்த்தி,மாவட்ட பொருளாளர் .உதயம் பொ.செல்வம் கலந்து கொண்டு மாநாடு விளக்கவுரை ஆற்றினர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ.லாரன்ஸ் ரமேஷ் சங்க இளைஞரணி நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்தார். உடன் கோவை மண்டல இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் எஸ் கே எம்.பாலகிருஷ்ணன், மாவட்ட செய்தி தொடர்பாளர் எ ஆர்.சாதிக் பாட்சா, மாவட்ட துணைச் செயலாளர் கள் டி சிதங்கதுரை, பி.மாதேஸ்வரன், பவானி வட்டார நிர்வாகிகள், பவானி நகர வணிகர்கள் சங்க நிர்வாகிகள், நசியனூர் பொது வியாபாரிகள் சங்க நிர்வாகிகள், அசோகபுரம் அனைத்து வணிகர்கள் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். சங்க துணைத் தலைவர் எச்ஞானராஜ் சாமூவேல் நன்றிகூறினார். விழா முடிவில் குலுக்கல் பரிசும் இரவு விருந்தும் நடைபெற்றது.

# கோயம்பேடு உள்வட்ட சாலையில் ரூ.8.63 கோடியில் பசுமை பூங்கா

சென்னை ஏப் 30-

கோயம்பேடு உள்வட்ட சாலை பூந்தமல்லி நெடுஞ்சாலை சந்திப்பு பகுதியில் சுமார் 3.59 ஏக்கர் பரப்பளவில் ரூ.8.63 கோடி மதிப்பீட்டில் யோகா மையம், நடைபயிற்சி பாதை, ஜிம் உள்ளிட்ட வசதிகளுடன் இயற்கை எழில் கொஞ்சும் பசுமை பூங்கா அமைக்கும் பணியில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஈடுபட்டு வருகிறது.இந்த பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதால், மே மாதம் இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும், என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், 'கோயம்பேடு மேம்பாலத்தின் கீழ் பகுதியில் பிரமாண்டமாக பசுமை பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் பூங்கா கட்டப்பட்டு வருவது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. இது எப்போது பயன்பாட்டிற்கு திறக்கப்படும், என ஆவலோடு காத்திருக்கிறோம் என்றனர்.

# பாட்டியா தொழில் வர்த்தக கண்காட்சி வரும் 2-ந் தேதி தொடங்குகிறது



ஈரோடு ஏப்ரல் 30-:

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு (ஃபாட்டியா) சார்பில் வரும் மே இரண்டாம் தேதி ஈரோடு பரிமளம் மகாலில் 4 நாள் தொழில் வர்த்தக கண்காட்சி துவங்குகிறது. அமைச்சர்கள் முத்துசாமி மற்றும் அன்பரசன் கண்காட்சி துவக்கி வைக்கிறார்கள் என்று கூட்டமைப்பு தலைவர் வி கே ராஜமாணிக்கம் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: மொத்தமுள்ள 210 அரங்கங்களில் 110 அரங்குகளுக்கு மத்திய மாநில அரசுகள் ரூபாய் 32,000 வாடகை கட்டணத்தில் மானியமாக தருகின்றன. தமிழகத்திலேயே மிக அதிக அளவு மானியம் இந்த கண்காட்சி மூலம் ஈரோடு மாவட்டம் பெற்றுள்ளது. இக்கண்காட்சியின் முக்கிய நோக்கம் எதிர்காலத்தில் ஈரோடு மாவட்டத்தில் கோவையில் இருப்பது போன்ற மிகப்பெரிய தொழில் வர்த்தக கண்காட்சி அரங்கினை அமைப்பதாகும். இதற்காக அரசிடம் 10 ஏக்கர் நிலம் கோரியுள்ளோம். நிலம் கிடைத்தால் சங்கம் மூலமாகவே வர்த்தக மையம் அமைக்கப்படும். இக்கண்காட்சியில் மொத்தம் 30 பெண் தொழில் முனைவோர்கள் கலந்து கொள்கின்றனர். சிறு குறு தொழில் அமைச்சகத்தின் கீழ் பதிவு பெற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு மத்திய மாநில அரசுகளின் (கண்காட்சியில் ஸ்டால் வாடகை) மானியம் 100 சதவீதம் கிடைக்கும். இக்கண்காட்சி லாப நோக்கம் இன்றி நடத்தப்படுகிறது. எனவே நுழைவு கட்டணம் கிடையாது. கடந்தாண்டு வருடம் ரூபாய் 5 லட்சம் லாபம் கிடைத்தது. அதுவும் வணிகர்கள் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்த சமூக சேவை திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டது. கண்காட்சியில் புதிய தொழில்நுட்பம் புதிய கருத்துக்கள் கொண்டு அமைக்கப்படும் ஸ்டால்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். அதைத்தவிர மாணவ மாணவிகளுக்கான போட்டிகள் மருத்துவ முகாம் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதை அடுத்து சிறு குறு தொழில்துறை மூலம் வாங்குவோர் விற்பனையாளர் சந்திப்பு மாநாடு மாநில அளவில் பாட்டியா நடத்த உள்ளது.மாவட்ட ஆட்சியர் ராஜகோபால் சுங்காரா துவக்கத்திலும் நிறைவு விழாவில் மாவட்ட எஸ்பி சுஜாதாவும் மற்றும் பல எம்பிக்கள் எம் எல்ஏக்கள் கலந்து கொள்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

